## ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை
## (05.09.2018முதல் 09.09.2018)

**அறிக்கைஎண் 70/2018** **தேதி:04.09.2018**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செமுதல்13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (05.09.2018 முதல் 09.09.2018)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 06.9.18 மற்றும் 09.09.18 ஆகிய தேதிகளில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 முதல் 85 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 45 முதல் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 முதல் 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 05.09.18 | 0.5 | 33 | 23 | 6 | 85 | 45 | 10 | தென்மேற்கு |
| 06.09.18 | 1 | 33 | 23 | 6 | 85 | 45 | 10 | தென்மேற்கு |
| 07.09.18 | 0 | 32 | 22 | 6 | 80 | 45 | 10 | தென்மேற்கு |
| 08.09.18 | 0 | 32 | 22 | 6 | 80 | 45 | 8 | தென்மேற்கு |
| 09.09.18 | 4 | 33 | 23 | 6 | 85 | 50 | 8 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ மழையுடன் காற்றின் வேகமும் அதிகமாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுவதால் வாழை மற்றும் கரும்புக்கு சாயாமல் ஊன்று கொடுக்கவும்.
- ✓ செப்டம்பர் முதல் நவம்பர் மாதம் வரை உள்ள மாதங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும்.
- ✓ மழையினை பயன்படுத்தி பருத்தியில் விதை முளைக்காத இடங்களில் பாடுவாசி ஊடுவிதைப்பு செய்யவும். செடியின் வளர்ச்சி குறைந்து காணப்பட்டால் 0.5 சத யூரியா கரைசலை போதிய மண் ஈரம் இருக்கும் பட்சத்தில் தெளிக்கவும்.
- ✓ தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் இருப்பதாலும் கால்சியம் கார்பனேட் அதிகம் கலந்துள்ள செம்மண் பூமியில் நடப்பட்டுள்ள மரவள்ளி கிழங்கில் நுண்ணுட்டசத்துகளின் பற்றாக்குறை பரவலாக காணப்படுகிறது.இதை நிவர்த்தி செய்ய 1 சத இரும்பு சல்பேட் கரைசலுடன் 1 சத மெக்னீசியம் சல்பேட் மற்றும் 0.1சத யூரியா கரைசலை சேர்த்து கலந்து தெளிக்கவும்.
- ✓ மஞ்சள் நடப்பட்டடு 90 நாள் ஆகியிருக்கும் பட்சத்தில் மூன்றாவது மேலுரமாக 50கிலோ யூரியா மற்றும் 30கிலோ பொட்டாஷ் ஒரு எக்டருக்கு இடவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ செப்டம்பர் முதல் நவம்பர் மாதம் வரை உள்ள மாதங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்